# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாந் தவணைப் பரீட்சை - 2023

| தரம் - 9 | தமிழ்மொழி | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

### பகுதி I

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. அதிகாலையில் துயில் விட்டு எழுக. இங்கு **அதிகாலை** என்பதன் ஒத்த சொல்.
    1) வைகறை  2) அனந்தல்  3) சாயங்காலம்  4) அல்

02. ரோஜா நந்தவனத்தில் வீசிய காற்றில் நர்த்தனம் புரிந்தாள். இங்கு நர்த்தனம் என்பதன் ஒத்த சொல்.
    1) சித்திரம்  2) சிற்பம்  3) நடனம்  4) கவிதை

03. வருந்தி வந்தவருக்கு ஈதல் நல்லது. இங்கு ஈதல் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்
    1) ஏற்றல்  2) தேடல்  3) கொடுத்தல்  4) கற்றல்

04. கடற்கரைக் காட்சி எல்லோருக்கும் களிப்பு அளிக்கும். இங்கு களிப்பு என்பதன் எதிர்க்கருத்து
    1) மகிழ்ச்சி  2) கவலை  3) இரசனை  4) சந்தோஷம்

05. மீனின் இளையது குஞ்சு என்பது போல தவளையின் இளையது.
    1) குட்டி  2) போதகம்  3) கன்று  4) பேத்தை

06. குரங்கு அலப்பும் என்பது போல தேவாங்கு
    1) கத்தும்  2) கதறும்  3) கரையும்  4) அழும்

07. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்.
    1) ஐம்பூதம்  2) ஐந்திணை  3) ஐம்புலன்  4) ஐம்பொறி

08. புயற்காற்றினால் அடித்துச் செல்லப்பட்ட படகு அங்கும் இங்கும் அலைந்தது. இதில் **அங்கும் இங்கும்** என்பது.
    1) இணைமொழி  2) இரட்டைக்கிளவி
    3) அடுக்குத்தொடர்  4) அடுக்கிடுக்குத்தொடர்

09. அம்பு, ஒலி, கடல், துன்பம், போர் என்பவற்றைக் குறித்து வரும் ஒரு சொல்
    1) வில்லு  2) கலி  3) சக்கரம்  4) சமர்

10. பின்வரும் சொற்களில் வேறுபட்ட பொருள் குறித்து வரும் சொல்
    1) வயல்  2) கழனி  3) தழை  4) பழனம்

11. கார்த்திகை பூத்தது, இங்கு கார்த்திகை என்பது
    1) பொருளாகுபெயர்  2) சினையாகு பெயர்
    3) குணவாகுபெயர்  4) காலவாகு பெயர்

12. ‘யார் சிறந்தவர்’ என்ற கட்டுரையின் ஆசிரியர்
    1) எம்.எஸ்.உதயமூர்த்தி  2) யோ.பெனடிக்ற்பாலன்
    3) ராணி சிதம்பரநாதன்  3) அன்பு முகைதீன்



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

13. பெயர் அல்லது வினையுடன் விகுதி சேர்ந்து உருவாக்கப்படும் பெயர்

1) ஆக்கப் பெயர் 2) கூட்டுப்பெயர்

3) தொழிற்பெயர் 4) காலப்பெயர்

14. பொதுப்பாற் சொல்லாக அமைவது,

1) மாணவன் 2) வைத்தியர் 3) வீரன் 4) விதவை

15. யருசனது வீடு கல்லால் கட்டப்பட்டது. இங்கு வந்துள்ள ஆறாம் வேற்றுமை உருபு

1) ஆல் 2) பட்டது 3) அது 4) வீடு

16. கட்டுரை ஒன்றின் பகுதி அல்லாதது.

1) முகவுரை 2) உடல் 3) விளிப்பு 4) முடிவுரை

17. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினை அமைந்த வாக்கியம்

1) தம்பி வேகமாக நடந்தான்.

2) அம்மா பொங்கல் சமைத்தார்.

3) அக்கா பாட்டுப் பாடினாள்.

4) மாணவர் வினாவுக்கு விடை தேடினர்.

18. Fax என்பதன் கலைச்சொல்

1) மின்னஞ்சல் 2) இணையம்

3) தொலைநகல் 4) போட்டோப்பிரதி

19. பின்வருவனவற்றில் கூட்டுப்பெயராக அமைவது

1) தொழிலாளி 2) முதலாளி

3) விருந்தாளி 4) வானொலி

20. ‘பூ அழகாக மலர்ந்தது’ இங்கு அழகாக என்பது

1) பெயரெச்சம் 2) வினையெச்சம் 3) பெயர்ச்சொல் 4) வினைமுற்று

21. பின்வருவனவற்றுள் காரண இடுகுறிப்பெயராக அமைவது.

1) நிலம் 2) பறவை 3) அணி 4) நாற்காலி

22. நிகழ்கால இடைநிலைகளாவன.

1) த், ட், ற், ன் 2) கிறு, கின்று 3) ப், வ் 4) ஆகவே, எனவே

23. பின்வருவனவற்றுள் ஒல்லாந்து மொழிச் சொல்லாக அமைவது.

1) அலுமாரி 2) குசினி 3) அட்டிகை 4) கந்தோர்

24. பின்வருவனவற்றுள் கிரந்த எழுத்து அல்லாதது

1) ஸ 2) ச 3) ஷ 4) க்ஷ

25. அறுபதாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா.

1) பவளவிழா 2) வெள்ளிவிழா 3) வைர விழா 4) தகர விழா

26. தமிழிலுள்ள உயிர்மெய் எழுத்துக்கள்

1) 247 2) 90 3) 126 4) 216

27. நீர் இங்கே இருந்தீரென நானறிந்திருந்தால்

1) உடனே வருகிறேன் 2) உடனே வந்திருந்தேன்

3) உடனே வந்திருப்பேன் 4) உடனே வருவேன்



kalvi.lk

28. ஆசிரியர் தம் மாணவனுக்குக்கூறிய அறிவுரைகள் யாவும் பயனற்றுப்போயின என்பதைக் குறிக்கும் உவமைத்தொடர்.

1) உள்ளங்கை நெல்லிக்கனிபோல
2) இலைமறை காய்போல
3) உடுக்கை இழந்தவன் கைபோல
4) புறக் குடத்தில் வார்த்த நீர் போல

29. நீ மகிழ்ச்சியாக இருப்பது பற்றி எனக்கு மகிழ்ச்சியே ………………. நான் எப்போதும் மகிழ்ச்சியை நம்பியிருப்பதில்லை.

1) ஆகவே 2) எனவே 3) அதனால் 4) ஆனால்

30. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி பந்தி ஒன்றினை ஆக்குவதற்கான வைப்பு முறையினைத் தெரிவு செய்க.

அ) அத்தகைய வளம் மிக்க பிரதேசத்திலே தவமுனிவர் சேரி ஒன்றிருந்தது.
ஆ) அது வயலும் வாவிகளும் நிறைந்துள்ள நீர்வளப் பிரதேசம்
இ) அம் முனிவர் சேரியிலே குசேலர் பிறந்தார்
ஈ) தமிழகத்தின் வடமதுரையை அடுத்து அமைந்துள்ள நகரம் அவந்தி
உ) அவரிடம் சிறந்த பழக்க வழக்கங்கள் பல நிறைந்திருந்தன.

1) ஈ, உ, அ, இ, ஆ 2) ஈ, ஆ, அ, இ, உ
3) அ, இ, ஆ, உ, ஈ 4)அ, ஆ, உ, ஈ, இ

(30 x 1 = 30 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## பகுதி II

❖ அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

(01) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து 200 சொற்களில் கட்டுரை எழுதுக

அ) நல்ல எண்ணங்களே உயர்வு தரும்

ஆ) நீரின்றி அமையாது உலகு

இ) மாணவர்களும் தொடர்பாடல் சாதனங்களும்

ஈ) நான் சென்ற மலை நாட்டுப் பிரயாணம்

(20 புள்ளிகள்)

(02) பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவு செய்து 75 சொற்களில் அமையுமாறு எழுதுக

அ) உமது பாடசாலையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டி தொடர்பாக நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக

அல்லது

ஆ) அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைத் தடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி துண்டுப் பிரசுரம் வரைக

(10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

(03) பின்வரும்பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

‘தமிழர்க்கு தமிழ் மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலா சாலையைப்போல் எங்கும் வேண்டும்
தமிழிலிலாப் பிறமொழி நூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்
அமுதம்போல் செந்தமிழிற் கவிதை நூல்கள்
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூல்கள்
சுமை சுமையாய்ச் சேகரித்துப் பல்கலைசேர்
துறை துறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்’

- பாரதிதாசன் -

i) இப்பாடல் எதனை வலியுறுத்துகின்றது?

ii) சுவடிச்சாலை என்பதன் பொருள் யாது?

iii) எவ்வகை நூல்கள் அங்கு இடம்பெற வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது?

iv) ‘சுமை சுமையாய்ச் சேகரித்தல்’ எனும் தொடரின் சிறப்பினை விளக்குக.

v) இப்பாடலைப் பாடிய கவிஞரின் மனோநிலை யாது

(5 x 2 = 10 புள்ளிகள்)



kalvi.lk

(04) பின்வரும் கூற்றுக்கள் யாரால், யாருக்கு கூறப்பட்டன

அ) 'முன்பு இடி இடித்தது, இப்போது மழைபெய்கிறது'

ஆ) 'நீ உலகம் தெரியாதவள், கலீபா என்ன
பார்த்துக் கொண்டா இருக்கிறார்?

இ) 'யாருக்கு வெற்றி, உனக்கா? பூச்சிக்கா?

ஈ) 'வாங்க மருமகனே சுகமா? வீட்டில் எல்லோரும் சுகம் தானே?

உ) நறுமணத்தைப் பற்றியும் குணத்தைப் பற்றியும் நீயா பேசுகிறாய்?

(5 x 2 = 10 புள்ளிகள்)

(05) பின்வரும் சொற்களை வைத்து பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.

அ) வெட்டவெளி

ஆ) கன்னங்கரிய

இ) அணை கடந்த வெள்ளம் போல

ஈ) சல சல

உ) குழறிக் குழறி (5 புள்ளிகள்)

(06) பின்வரும் வாக்கியத்திலுள்ள எழுத்துப்பிழைகளைத் திருத்தி எழுதுக.

தமிளைப் படித்துத் தமில் செய்து தழிலாகவே வாள்ந்த புளவர் மணியனின் ஆக்கங்கழில் உணர்ச்சியின் எலுந்த தர்க்கத்தைக் காணலாம்.

(5 புள்ளிகள்)

(07) சுருக்கமான விடை தருக.

i) எண்ணங்களின் வகைகள் எவை?

ii) கீழ்மட்ட எண்ணங்களைத் தேர்ந்தெடுப்பவர்களின் இயல்புகள் எப்படிப்பட்டவை?

iii) கலீபா உமர் (றழி) சிறந்த தலைவர் என்பதற்கான ஆதாரங்கள் எவை?

iv) பூச்சியின் இலட்சியமாகக் கதாசிரியர் குறிப்பிடுவது யாது?

v) 'இதயம் அழுகிறது'என்ற கவிதையின் ஆசிரியர் யார்?

vi) மாணவனின் குண நலன்கள் பற்றி கவிதையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தருக.

vii) மருமகன் தப்பியோடுவதற்குக் காணரம் யாது?

viii) நற்குணம், மென்மை உடையவர் போற்றப்படுவார் என்பதை 'யார் சிறந்தவர்'என்ற கதை உணர்த்தும் விதத்தைத் தருக.

ix) இலங்கைத் தீவினைச் சுற்றிப்பார்த்த வெளிநாட்டவர்களின் கருத்துக்களைத் தருக.

x) மலை நாட்டுப் பிரயாணத்தினால் தான் அடைந்த நன்மைகளாக கட்டுரையாசிரியர் குறிப்பிடுபவற்றைத் தருக?

(10 x 2 = 20 புள்ளிகள்)



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**